[1980 ஜூலை 16

[முற்பகல் 9.30]

திரு. ரா. கு. பெருமாள்: தலைவர் அவர்களே, மதுரையில் பெஞ்ச் கோர்ட் வேண்டுமென்று மத்திய அரசுக்கு சிபாரிசு செய்யும்போது நெல்லை, திருச்சி, கோவை போன்ற இடங்களிலும் கோர்ட் வைக்க சிபாரிசு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : அத்தகைய பரிந்துரை செய்கிற எண்ணம் அரசுக்கு இல்லை.

திரு. செ. சிவசாமி : மதுரையில் ஹைகோர்ட்டின் ஒரு பெஞ்ச் அமைக்கவேண்டும் என்று அரசாங்கம் மூன்று தடவை கேட்டும் கூட இன்றுவரை அனுமதி மறுக்கப்படுகிறது. இதே போல் சிவகங்கையில் ஒரு சர்க்கரை ஆலை வேண்டுமென்று கேட்டு அனுமதி மறுக்கப்படுகிறது. அதேபோல் கூட்டுறவு சம்பந்தமாக ஒரு ஆலை வேண்டுமென்று கேட்டாலும் மறுக்கப் படுகிறது.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஹைக்கோர்ட்டுக்கும் கூட்டுறவுக்கும் என்ன சம்பந்தம் ? அடுத்த கேள்வி.

வத்திராயிருப்பு அரசினர் மருத்துவமனையில் பணிபுரியும் மருத்துவர்கள்.

கு. கா. வி. 19. திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிப்புத்தூர் தொகுதி, வத்திராயிருப்பு அரசினர் மருத்துவமனையில் பணிபுரியும் மருத்துவர்கள் மீது புகார்மனு ஏதும் 8.6.80 அன்று அரசுக்கு வந்துள்ளதா ?

(ஆ) இம்மருத்துவமனையில் பணி சீராக நடைபெறுவதில்லை என்பதை அரசு அறியுமா ?

(இ) தவறு செய்த மருத்துவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :—(அ) 8-6-80 அன்று வத்திராயிருப்பு அரசு மருத்துவமனையில் நடந்த ஒரு சம்பவம் பற்றி அரசுக்கு ஒரு அறிக்கை வந்துள்ளது.

1980 ஜூலை 16]

(ஆ) இந்த சம்பவத்தைத் தவிர இம்மருத்துவமனை சரியாக இயங்கவில்லையென்ற எந்தப் புகாரும் அரசுக்கு வரவில்லை.

(இ) தவறுசெய்த மருத்துவரை மருத்துவம் மற்றும் குடும்ப நல்இயக்குநர் தற்காலிகப் பணி நீக்கம் செய்திருக்கிறார். மேல் விசாரணை நடந்து கொண்டிருக்கிறது என்றும் அறிவித்துள்ளார்.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் ஓர் தவறு செய்ததாகச் சொல்கிறார்கள் பதிலில். அது என்ன தவறு என்று அறிய விரும்புகிறேன். அந்தத் தவறு சிவப்பு ரோஜா என்ற சினிமாப் படத்தில் கதாநாயகன் தவறு செய்ததைப் போல் செய்திருப்பதாக அங்குள்ள பொது மக்கள் என்னிடம் சொல்கிறார்கள். அது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, சிவப்பு ரோஜா தவறு என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமரைக்கனி அவர்கள் சொல்கிறார்கள். அது என்ன என்று எனக்குத் தெரியாது. அவர், என்ன தவறு செய்திருக்கிறார் என்ற கேள்வியைப் பொறுத்தவரையில் நான் சுருக்கமாகச் சொல்ல விரும்புகிறேன். அங்கே டாக்டர் ஞானசேகரன் என்ற ஒரு அஸிஸ்டெண்ட் சர்ஜன் அந்த மருத்துவமனையில் இருக்கிறார். டைரக்டர் ஆப் மெடிக்கல் சர்வீஸஸ்–லிருந்து சாதாரணமாக ஒரு ஆடிட் பார்ட்டி அனுப்புவார்கள். டைரக்டர் ஆப் மெடிக்கல் சர்வீஸஸ் ஆடிட் பார்ட்டியை அனுப்பி மருத்துவமனைகளில் உள்ள கணக்குகளை ஆடிட் செய்ய அனுப்புவது வழக்கம்—என்னென்ன தவறுகள் செய்யப்பட்டிருக்கின்றன என்று பார்க்க. அந்த அடிப்படையில் ஒரு ஆடிட் பார்ட்டியை அனுப்பினார் டி.எம்.எஸ். அந்த ஆடிட் பார்ட்டி அங்கே வந்தவுடன் உடனடியாக இவர், ஏன் வந்தீர்கள் என்று கேட்டார். டி.எம்.எஸ். அனுப்பினார், ஆகவே வந்திருக்கிறோம் என்று சொன்னார்கள். இங்கே வரக் கூடாது, வெளியே போங்கள், ஆடிட் செய்ய உங்களுக்கு உரிமை இல்லை என்று சொன்னார். இல்லை, நாங்கள் ஆடிட்டில் ஈடுபட்டாகவேண்டும் என்று ஆடிட் பார்ட்டி அதிகாரிகள் சொன்னார்கள். உடனடியாக இந்த டாக்டர் ஞானசேகரன் வெளியே சென்று கிட்டத்தட்ட இரண்டு மணி நேரத்திற்குப் பிறகு ஒரு இருபத்தைந்து பேர்களைக் கொண்டு வந்து ஏன் இப்படியெல்லாம் செய்து கொண்டிருக்கிறீர்கள் என்று மிரட்டி கலாட்டா செய்தார்கள். அதன் அடிப்படையில்தான் ஒரு அஸிஸ்டெண்ட் டயரக்டரை இந்த டி.எம்.எஸ். ஆபீஸிலிருந்து அனுப்பியிருக்கிறார்கள். விவர அறிக்கையை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம்.